**சுற்றறிக்கை இல.** 2010/03(i)


මැතිවරණ දෙපාර්තමේන්තුව
தேர்தல்கள் திணைக்களம்

පොදු කාර්යාලය - 2868441-3
பொது அலுவலகம்

මැතිවරණ කොමසාරිස් - 2868444
தேர்தல்கள் ஆணையாளர்
ෆැක්ස් தொலை நகல் 2868445

ගණකාධිකාරී (මුදල්) දු.අ. 2868449
கணக்காளர் (நிதி)
ෆැක්ස් தொலை நகல் 2868449

මැතිවරණ මහලේකම් කාර්යාලය,
තැ.පෙ. 2,
රාජගිරිය. 10107
தேர்தல்கள் செயலகம்,
த. பெ. 2,
இராஜகிரிய. 10107


මගේ අංකය :
எனது இல : FE/211/2010

ඔබේ අංකය :
உமது இல :

දිනය :
திகதி : 26.04.2010

மத்திய வங்கி ஆளுநர்,
அமைச்சுக்களின் செயலாளர்கள்/ பிரதமச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட சபைகளின் தவிசாளர்கள்,

## பாராளுமன்றத் தேர்தல் - 08.04.2010

## தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள்

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பான எனது சமஇலக்க 2010.04.09 ஆந் திகதிய கொடுப்பனவு சுற்றறிக்கை சார்பானது.

02. மேற்படி தேர்தலுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான 2010/03 ஆம் இலக்க 2010.04.09 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 6.3 ஆம் உபபிரிவு கீழ்க்காணும் விதத்தில் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

6.3 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்கு தமது தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தியமைக்காக, வேதனத்திற்கேற்க மைல்கட்டணம் பெற உரித்துள்ள அலுவலர்களுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் வழங்க முடியுமென்பதோடு, அது தாபனக் கோவையின் xiv ஆம் அத்தியாயத்தின் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அவ்வலுவலர்களுள் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்காக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு மாத்திரம் அவர்களின் வாகனத்திற்காக சாரதியொருவரை கூட்டிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த தனியார் சாரதிக்கு (அரசாங்க சேவையிலில்லாத) ஒரு நாளைக்கான வேதனமாக ரூபா. 350/= உம் கூட்டு அலவன்ஸ்சாக (12 மணி நேர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின்) ரூபா. 350/= வீதமும் குறிப்பிட்ட நாட்களுக்காக செலுத்த முடியும். குறிப்பிட்ட மணித்தியாலங்கள் பூர்த்தியாகியிருக்குமாயின் தாபனக் கோவையின் xiv - 4:4:3 இற்கிணங்க கூட்டு அலவன்சின் 25 % மேலதிக கொடுப்பனவையும் இவர்களுக்கு செலுத்த முடியும்.

அலுவலர், குறிப்பிட்ட சாரதிக்கு இக்கொடுப்பனவை செலுத்திவிட்டு சாரதி அதைப் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றை கொடுப்பனவு வவுச்சருடன் இணைத்தல் வேண்டும். அலுவலரின் நிரந்தர அலுவலகத்திலிருந்து இக்கொடுப்பனவை பெற்றுக்கொண்டு மீள் நிரப்பலுக்காக " படிவம் - ஏ " மூலம் எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இக்கொடுப்பனவை குறிப்பதற்காக " ஏ " படிவத்தில் வேறான ஒரு நிரை இல்லை. ஆகவே முதலாம் நிரையில் (01) தலைமை வாக்கெண்ணும் அலுவலர்/ வாக்கெண்ணும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் பெயருக்கெதிரே (09) நிரையில் கனிட்ட ஊழயர்களின் கொடுப்பனவுகளின் கீழ் சாரதிகளுக்கான கொடுப்பனவு எனக் குறிப்பிட்டு மீள் நிரப்பலுக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. மஹநுவர மற்றும் திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் 2010.04.20 ஆந் திகதி மீண்டும் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டபோது அப்பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவுகளும், மேற்கூறப்பட்ட திருத்தங்கள் உட்பட்ட 2010/03 ஆம் இலக்க 2010.04.09 ஆந் திகதிய பாராளுமன்றத் தேர்தல் பணியாட்களுக்கான கொடுப்பனவுகள் சுற்றறிக்கைக்கையின் அறிவுறுத்துரைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்,

DelNW/w/PE10/2010Payments/DutyStf